## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,

## கிருஷ்ணகிரி மாவட்டம்.

அசல் வழக்கு எண்.112/2013 நாள்: 14.10.2019

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.2 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன், பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

பெயர் : ரேணு

தந்தை பெயர் : சின்னசாமி கவுண்டர்

கிராமம் : தாலுக்கா :

வயது : வேலை :

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் 3 ம் தரப்பினர் ஆவேன். நான் வாதி தரப்பில் சாட்சியாக முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும், என்னால் சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். இதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். இதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனவே எனது பிரமாண பத்திரத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன். சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

மாணிக்கம் எனக்கு என்ன உறவு என்றால் அக்கா மகன் ஆவார். எனது நிலமும் மாணிக்கத்தின் நிலமும் பக்கம் பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனக்கும் மாணிக்கத்திற்கும் இடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. எனக்கும் மாணிக்கத்திற்கும் இடையே விரோதம் உள்ளது என்றாலும் அதன் காரணமாக நான் மாணிக்கத்திற்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுதல் பேரில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.